தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 09.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-2004/SCIC/2020**

திருமதி P.பிரேமா -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பொது அதிகார அமைப்பு
அண்ணாநகர் கோட்டம்,
திருமங்கலம்,
சென்னை 600 101

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 06.09.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் தனது புகார் மனு குறித்து கீழ்கண்ட தகவல்களைக் கோரியுள்ளார்.

I. If no action has been taken, please mention the reasons for not taking action.
II. Kindly mention the area and number of shops encroaching the parking area of the complex.
III. Please provide the name, delegation, address of the official responsible for removing the encroachments.

2. இதற்கு பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து எந்தவித பதிலும் பெறப்படாத நிலையில் மனுதாரர் பிரிவு 19(1)-ன்கீழ் 26.10.2019 அன்று முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து எந்தவித பதிலும் பெறப்படாத நிலையில் மனுதாரர்

பிரிவு 19(3)-ன்கீழ் 21.02.2019 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 04.08.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் ஆணையத்திற்கு கடிதம் மூலமாக தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

4. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் கடித எண். அ.ந.கோ II.3/13264/1985 நாள் 10.09.2020 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 09.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

(ரா. ராஜகோபால்)
மாநில தலைமைத் தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப்பதிவாளர்

<u>வழக்கு எண். SA- 2004/SCIC/2020</u>

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
அண்ணாநகர் கோட்டம்,
திருமங்கலம், சென்னை 600 101

<u>மனுதாரர்</u>

திருமதி P. பிரேமா,
140 A, ருக்மணி லட்சுமிபதி ரோடு,
எழும்பூர், சென்னை 600 008

TK/PA 09.11.2020